உ

திருமூலர் திருமந்திர ஆலய விளக்கம்

திருமந்திரமணி

துடிசை கிழார் அ. சிதம்பரனார் அவர்கள்

●

ஞானியார் தமிழ் சங்கம் பொத்தனூர் (சேலம்)

கோவை ஜுவல் அச்சகம்

1950

ஆலய விளக்கம்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று ஔவையார் கூறியுள்ளார். அதனை இளம் பிராயத்திலேயே நாம் மனப்பாடம் பண்ணியிருக்கிறோம். அதனை எவரும் மறந்திருக்க மாட்டோம். மேலும் நாள் தோறும் நமது ஊர்களிலே நம் எதிரே ஆலயங்களை பார்த்துக்கொண்டே இருக்கிறோம். சிற்சில நேரங்களில் ஆலயத்திற்குள் சென்று தொழுதுவிட்டும் வருகிறோம். அப்படிப்பட்ட ஆலயத்தின் விவரங்கள் முழுவதும் நாம் அறிந்திருக்கிறோமா என்பது ஒரு கேள்வி.

அறிந்தவர்களுக்கு நாம் விளக்கவேண்டியதில்லை. அறியாதவர்களுக்குத்தான் விளக்கவேண்டும். நமது நாட்டில் பெரும்பான்மையான பேர்கள் எழுத்து வாசனை அறியாதவர்கள். அவர்கள் ஆலயத்திற்குச் செல்லும்போது குருட்டுத்தனமாகச் சென்று தொழுதுவிட்டு வருகிறார்கள். ஆலய விவரத்தை நன்றாகப் போதிப்பது 'திருமந்திரம்' என்ற அரிய சைவநூல். அதைப் படித்து அறிவது கடினம். படித்தவர்களே அறிந்துகொள்ள முடியாவிட்டால் படியாதவர்கள் எவ்வாறு அறிவார்கள்.

அப்படிப்பட்டவர்களும் தெளிவாக அறிந்து கொள்ளும் வண்ணம் துடிசை கிழார் சிதம்பரனார் அவர்கள் திருமந்திரத்தில் உள்ள ஆலய விவரங்களைத் தெளிவான நடையில் "திருமூலர் திருமந்திர ஆலய விளக்கம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்கள். அதனைச் சித்தாந்த கோண்டைக்கால வகுப்பில் தெரியப்படுத்தினார்கள். பின்னர் அதனைச் சித்தாந்தத்தில் வெளியிட்டேன். சென்ற 1—11—50 தேதியில் பாண்டமங்கலம் காசி விசுவநாதர் சன்னிதியில் நடைபெற்ற கந்தர்சஷ்டி உபன்னியாசங்களில் துடிசை கிழார் அவர்கள் அதனைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். அங்கே இருந்து கேட்ட அன்பர்கள் அக் கட்டுரையை மீண்டும் வெளியிட்டுப் பொதுமக்கட்கு உதவவேண்டும் என்று விரும்பினார்கள். பொத்தனூர் சைவப் புலவர் மணிவாசகனார் அவர்கள் அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு பொருள் உதவி செய்வதாக 1. சே. மு. வெங்கட்ராம செட்டியார், பெருவணிகர், பாண்டமங்கலம், சேலம், 2. வெ. த. ஆறுமுகம் பிள்ளை, நிலக்கிழார், பொத்தனூர் (சேலம்) இந்த வகையில் இச் சிறுநூல் வெளிவருகின்றது. இவ் வெளியீட்டிற்குச் சாதகமாக இருந்த எல்லாப் பெரியோர்களுக்கும் சைவ உலகம் கடமைப்பாடு உடையது.

கோவை கிழார்.

திருமூலர் திருமந்திர ஆலய விளக்கம்

1. படமாடுங் கோயில்.

"படமாடுங் கோயில் பரமர்க்கொன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமர்க்கங் காகும்"

—தமிழ் மூவாயிரம்·காலோத்தரம்·1821.

மனிதனுடைய உடம்பு **நடமாடுங் கோயில்** என்னப்படும். உடம்பில் உள்ள உட்கருவிகளையும், அகக்கருவிகளை இயக்கும் சக்திகளையும் (Power), நாம் நேரே பார்க்கமுடியாதாகையால், அவைகளைப் படம் மூலமாகத் தெரிந்துகொள்ளும்பொருட்டுக் கோயில்களாகிய படமாடும் நிலைகளைக் கட்டி வைத்தார்கள் நம் பெரியோர்கள். நம் தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் எல்லாம் அத்தன்மையனவே அதனாலே, அக் கோயில்களுக்குப் '**படமாடுங் கோயில்**' என்று பெயர் அமைந்தது.

இது எதுபோல் என்றால், ஞாலநூல் (Geography) கற்பான் புக்க ஒருவன், நிலத்தின்கண் அமைந்த எல்லா இடங்களையும் ஊர்களையும், மலை நதி முதலானவைகளையும் நேரில் போய்ப் பார்த்துப் படிக்க முடியாது. ஒவ்வொருவனும் சில பாகங்களையே காண முடியும். ஆனால் ஞாலத்தின் படம் (Map) மூலமாக ஐந்து கண்டங்களையும், அவைகளில் உள்ள கடல், மலை, நதி, ஊர், கோயில் முதலியவைகளையும் பார்த்துப் படித்துத் தெரிந்துகொள்ளுவதுபோல என்க.

ஞாலநூல் படிப்பவன் ஞாலத்தின் படம் வேண்டாம் என்று சொல்ல மாட்டான். சொன்னால் அவன் அறிவாளி ஆகமாட்டான். அதுபோல, உடலின் தத்துவங்களை உணர

விரும்பும் ஒருவன், தான் தத்துவ நூல்களை வாசிக்கும் பொழுது, உடற்றத்துவ விளக்கப்படமாகக் காட்சி அளிக்கும் கோயில்களை வேண்டாம் என்று சொல்லமாட்டான். அப்படி ஒருவன் சொன்னால், அவன் அறிவாளி ஆகமாட்டான்

2. நடமாடுங் கோயில்

மனிதனுடைய உடம்பு 'நடமாடுங் கோயில்' என்று கூறுவது எப்படி ?

"உள்ளம் பெருகோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பெருமானுக்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

—தமிழ் மூவாயிரம் - காலோத்தரம் - 1792

என்று காலோத்தர ஆகமம் கழறுகின்றது.

இப்பாசுரத்தில் மனிதனுடைய உள்ளம் பெருங்கோயில் (கருவறை - கற்பக்கிரகம்) என்றும், ஊன் உடம்பு, அதாவது முழுஉடம்பும், ஆலயம், அதாவது முழுக்கோயிலும் ஆகும் என்றும், வாய் கோபுரவாசல் என்றும், உள்ளத்தின்கண் உள்ள சீவனே சிவலிங்கம் ஆகும் என்றும், ஐந்து புலன்களும் ஐந்து விளக்கங்கள் ஆகும் என்றும் கூறியிருப்பதை நோக்கவெளியாம்

ஆலயம் அசரமும், மனித உடம்பு சரமும் ஆனதால் மனித உடம்பு நடமாடுங் கோயில் என்னப்பட்டது. (சரம்- அசைவது; அசரம் - அசையாதது.)

3. சீவன் சிவலிங்கம்

சீவன்தான் சிவலிங்கம் என்று சொல்லுவது எப்படி ? என்றால் கூறுதும்:—

"தான் எங்குளன் அங்குளள் தையல் மாதேவி
ஊன் எங்குளது அங்குளன் உயிர்க் காவலன்

வான் எங்குளது அங்குள மந்த மாருதம்
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே"

—தமிழ் மூவாயிரம் - சிந்தாமணம் - 1031

இப் பாசுரத்தில், உயிர்க்காவலனாகிய சிவன் எவ்விடத்தும் நிறைந்திருந்த போதிலும், ஊனுள்ள உயிரினிடத்தில் சிறந்து விளங்குகிறான் என்று கூறப்பட்டுள்ளது. சிவனுக்கு **உயிர்க்காவலன்** என்று பெயர் கூறப்பட்டுள்ளதை நோக்க, சிவன் எப்போதும் உயிர்ப்பிராணிகளிடத்தில் சிறந்து விளங்குவான் என்பதும் பெற்றாம். என்னெனின், உடம்பை எடுக்காத உயிர் கேவல நிலையில் இருக்கும் அப்போது அவ்வுயிரினிடத்தில் சிறந்து விளங்கான் என்பது போதருகின்றது. ஊனுள்ள உயிர் சகலநிலை பெற்றது. கேவலநிலையில் உள்ள உயிரினிடத்தில் உயிர்க்காவலனாகிய சிவன் பதிந்து இருந்த போதிலும் சிறந்து விளங்கான்

இப்பாசுரத்தில் இன்னொன்று, அவன் இருக்கும் இடத்தில் அவளும் இருப்பாள் என்று கூறப்பட்டுள்ளது. 'தான் (சிவன்) எங்குளன் அங்குளள் தையல் மாதேவி' இக்கருத்தை மனதிற்கொண்டே மாணிக்கவாசகரும்,

'உடையாள் உன் றன் நடுவிருக்கும் உடையாள் நடுவில் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

—திருவாசகம் - கோயின்மூத்த திருப்பதிகம் - 1

என்று கூறியுள்ளார். இக்கருத்துக்கு ஒப்பவே, சிந்தாமணத்தில் ஐந்தெழுத்தின் விபரம் கூறும் பகுதியில்,

"அண்ணல் இருப்பது அவளக் கரத்துளே
பெண்ணி னல்லாளும் பிரான்அக் கரத்துளே

எண்ணி இருவர் இசைந்து அங்கு இருந்திடம்
புண்ணியவாளர் பொருள்அறிவார்களே''

—தமிழ் மூவாயிரம் - சிந்தாகமம் - 911

என்று கூறி விளங்கவைத்துள்ளார் திருமூலர்.

உள்ளந்தான் சீவனுக்கு இருப்பிடம். சீவனிடத்தில் சிவன் எப்போதும் இருப்பான். அதனால், 'உள்ளம் பெருங்கோயில் ஆயிற்று என்று திருமூலர் கூறியதற்கிணங்க, நம் சமய ஆசாரியர் சம்பந்த சுவாமிகளும் முதல் திருமுறை முதல் பாட்டிலேயே **'உள்ளங்கவர் கள்வன்'** என்று சிவபெருமானைச் சுட்டிக்காட்டியது எவ்வளவு பொருத்தமாயுள்ளது காண்மின்.

4. உடம்பு—ஆலயம்

மனித உடம்புக்கு ஆலயம் என்ற பேர் எப்படிப்பொருந்தும் என்பதை விளக்குவாம்:-

ஆ + இலயம்=ஆலயம்

ஈண்டு வருமொழி முதலில் உள்ள இகரங் கெட்டு **ஆலயம்** என்றாயிற்று.

ஆ—பசு. பசுக்களெல்லாம் உயிர்களே. ஆதலின் ஆ-உயிர் இன்னொன்று ஆ என்பதே உயிர் எழுத்து. உயிர் எழுத்துத்தான் உயிரினைக் குறிக்க ஏற்றது.

இலயம்—தங்குதல்.

உயிர் தங்கும் இடம் உடம்பு ஆதலின் உடம்புக்கு ஆலயம் என்ற பேர் பொருத்தமானது.

உடம்பு=உடை + ஐ + பூ

ஐந்து பூதங்களின் சேர்க்கையால் உண்டாகியது உடம்பு ஆகையால் உடம்பு என்னப்பட்டது'

இதனை, **''ஐந்து வகையாகின்ற பூத பேதத்தினால் ஆகின்ற ஆக்கை''** என்று தாயுமானவர் கூறியுள்ளதை நோக்க வெளியாம்.

இலயம்—தங்குதல்—ஒடுங்குதல்

இப்பொருள் சிவஞான போதத்தில்

"இலயித்த தன்னில் இலயித்ததாம் மலத்தால்
இலயித்தவா றுளதா வேண்டும்-இலயித்தது
அத்திதியில் என்னின் அழியா தவையழிவ(து)
அத்திதியும் ஆதியுமாம் அங்கு" —மெய்கண்டார் - 11

என்னும் செய்யுளுக்குச் சிவஞான முனிவர் செய்துள்ள உரையால் விளங்கும். அவ்வுரை வருமாறு.—

'உலகம் உள்ளதாயின் உள்ளதிற்கு உண்டாகவேண்டுவது இல்லையாதலால் சற்காரியவாதம் அடாது எனப் புத்தர் கூறுங் கடாவை ஆசங்கித்து. இல்லதற்குத் தோற்றம் இன்மையின் என்ற ஏதுவை வலியுறுத்தல் நுதலிற்று.

இலயித்தது இலயித்த தன்னில் ஆம்— உள்ளதாயினும் சங்கார காலத்தில் ஒடுங்கியதாகலான், அவ்வொடுங்கிய உலகம் தான் ஒடுங்குவதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக் காலத்தில் மீளவுளதாம் (அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே ஒழியாது, மீள உண்டாக வேண்டாம். வேண்டுமாயின் முன்னொடுங்கியது நிலைபெற்றவே அமையும்.) அவ்வாறின்றி, ஒடுங்கி மீள உளதாவது எற்றுக்கெனின்,

மலத்தால் - உள்ளதாகிய உலகம் **கரும மலம்** பரிபாகம் ஆதற்பொருட்டு ஒடுங்கி, **ஆணவமலம்** பரிபாகம் ஆதற்பொருட்டு மீளவும் உண்டாம்.

அற்றேல். முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக,வேறு தோன்றுமென்னுமல் அதுவே ஒடுங்கி நின்று மீள உளதாம் என்றற்குப் பிரமாணம் என்னை எனில்,

இலயித்தவாறு உளது ஆகும்வேண்டும் - எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃது அவ்வொடுங்கியவாறே உளதாதல் எல்லாராலும் விரும்பப்படும்.

5. பதி - பசு - பாச - வேறின்மை

உடம்பின்கண் உள்ள உயிர் பசுவாகவும், உயிர்க் காவலனாக இருக்கும் இறைவன் பதியாகவும், இறைவனைக் காணவொட்டாமல் மயக்கத்தைச் செய்கின்ற ஆணவத்தைப் பாசமாகவும் ஆகமங்கள் கூறக் கேட்டுள்ளோம்.

அப் பதி, பசு, பாச உண்மைகளைப் படமாடுங் கோயிலிலும் காண முடியுமா? முடியும்.

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடல் ஏறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வீரே"

தமிழ் மூவாயிரம் . சுப்பிரம் - 2372

என்ற திருமூலர் வாக்கால் அறியலாம்.

படமாடுங் கோயில் கருவறையில் (கற்பக்கிரகம்) உள்ள அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கமே பதி; அச் சிவலிங்கத்துக்கு அடுத்தாற்போல் இரண்டாம் கட்டில் (அர்த்த மண்டபம்) உள்ள ஆன் ஏறும், கொடிக் கம்பத்து அருகில் இருக்கும் ஆன் ஏறும் பசு; கொடிக் கம்பத்து அருகில் உள்ள ஆன் ஏற்றின் வாய்ப் பக்கம் இருக்கும் பலி பீடமும், இரண்டாங் கட்டில் உள்ள ஆனேற்றின் வால் பக்கத்தில் உள்ள பலிபீடமும் பாசம்:— என்று திருமூலர் தெளிவாகக் கூறியுள்ளார்.

6. பலிபீடம்

பலிபீடமானது முதல் ஆனேற்றின் வாய்ப் பக்கமும், இரண்டாம் ஆனேற்றின் வால்பக்கமும், மாறி இருக்கக் காரணம் என்ன என்று கேட்பீராயின், அதுதான் இயற்கை, விஞ்ஞானத்தின் விளைவு, தத்துவ நூலிற்கண்ட உண்மை. அதனைச் சிறிது விளக்குவாம்:—

பேர் ஒளியானது நமக்குப் பின்புறத்தில் இருந்தால் நம் நிழல் நமக்கு முன்னால் காணப்படும்; பேர் ஒளியானது நமக்கு முன்னால் இருந்தால் நம் நிழல் நமக்குப் பின்னால்

காணப்படும். இது ஒழுங்கு அல்லவா? ஒளியைப் பற்றிக் கூறும் ஒளி நூலும் அப்படியேதான் கூறுகின்றது.

அதுபோல, **பேர் ஒளிப்பிழம்பாகிய சிவபெருமானை** நாம் நினையாது, சாராது, வணங்காது இருப்போமாகில் நம்முடைய **பாசம்** (நிழல்) நமக்கு முன்னால் இருக்கும் அதாவது நாம் சிவபெருமானைப் **புறக்கணித்தவர்கள்** ஆகின்றோம். (புறக்கணித்தல் — முதுகுகாட்டல்). பாசம் நமக்கு முன்னால் இருந்தால், அது எதனையும் மறைக்கும்; நமக்கு மயக்கத்தை உண்டாக்கும்; அதோடு இன்ப துன்பங்களை விளைவிக்கும்.

பேர் ஒளிப்பிழம்பாகிய சிவபெருமானை நாம் நினைத்து கண்டு, வணங்கினால் பாசம் (நிழல்) நமக்குப் பின்னால் தங்கும். அப்போது பாச முனைப்பு இல்லை. மறைந்து நிற்கும் நமக்கு இருப்பதே தெரியாது.

இக்கருத்தினை உணர்த்தவே நம் பெரியோர்கள் அவ்வாறு அமைத்துள்ளார்கள்.

இக்கருத்தினை உணராத சில கோயில் அதிகாரிகளும், கோயிலைப் பழுதுபார்ப்பவர்களும் பலி பீடத்தை மாற்றி வைத்துள்ளதைப் பல கோயில்களில் பார்க்கின்றோம். இதற்கு அதனுடைய தத்துவத்தை அவர்கள் மறந்துவிட்டமையே காரணமாகும். கோயிலுக்குச் சென்று அங்குள்ள குறிகளை இன்னதென்று அறியாமலே வணங்குவது வழக்கமாகிவிட்டபடியால், குற்றங்களுக்கு இடம் ஏற்படுகிறது.

மிகுந்த பொருட் செலவில், பெருநாள் முயன்று, ஒரு கம்மியன் ஓர் உருவத்தை உருப்படுத்துவானேயாகில், அதற்குக் கண் இருக்கும் இடம் காதாவாகவும், காது இருக்குமிடம் கண் ஆகவும், அல்லது, முன்னால் அமையவேண்டிய கண்களைப் பின்னால் அமைத்துச் செய்தானானால், அவ்வுருவம் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அவ்வளவு பொருளும் நாளும் வீணேயாகும். அதுபோன்றதல்லவோ ஆலயங்கள். ஆலயங்களை அமைக்கவேண்டிய முறைப்படி அமைக்காவிட்டால் அருள் உண்டா

காது. அவ்வாலயமும், அவ்வாலயம் உள்ள ஊரும் அவ்வூரி லுள்ள குடிகளும் சீர் கெட்டு நிற்பார்கள்.

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே"

தமிழ் மூவாயிரம்—காரணம்—159

இப் பாசுரத்தில், பதியின் அருகில் உள்ள **பசுவினை பாசம் அதன் முன் நில்லாது** என்று கூறியது காண்க இந்த உண்மை யைத்தான் இரண்டாங்கட்டில் (அர்த்த மண்டபம்) உள்ள **ஆன் ஏறும்** அதன் **வால்பக்கமுள்ள பலிபீடமும்** விளக்குகின்றன.

7. உடம்புக்கும் கோயிலுக்கும் உள்ள ஒற்றுமை

கோவிலில் உள்ள ஐந்து சுற்று மதில்கள் ஐந்து பூதங் களையும், ஐந்து கோசங்களையும் குறிப்பனவாம். உடம்பானது ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டதும், **அன்னமயம் பிராணமயம்** (பிராணவாயு அல்ல) - **மனோமயம் - விஞ்ஞானமயம் - ஆனந் தமயம்** என்ற ஐந்து கோசங்களால் அமைந்ததும் ஆதலின், அவைகளைக் குறிக்கவே ஐந்து சுற்றுமதில்கள் ஏற்பட்டன.

சில கோயில்களில் ஒரே சுற்று மதிலும், சில கோயில் களில் மூன்று சுற்றுமதில்களும் இருக்கின்றனவே என்றால், காலம், இடம், பொருள் வசதிகளைக் குறித்து, ஒன்றே ஐந்தை யும், மூன்றே ஐந்தையும் குறிப்பாக உணர்த்தும்படி கட்டப் பட்டவையாகும்

கொடிமரம் (துவஜஸ்தம்பம்) உடம்பில் உள்ள வீணாத்தண்டு (சுழுமுனை நாடிசெல்லும் வழி) என்பதனைக் குறிக்கும். வீணாத் தண்டு எப்படி வர்ட்டப்ரே (Vertibrae) என்ற எலும்பு வளை யங்களைக் கொண்டு உள்ளதோ, அதுபோல கொடிமரமும் தாம்பிர வளையங்களைக்கொண்டுள்ளது. உடம்பில் உள்ள வளையங்கள் 33. அதுபோலவே, கொடிமரத்தின் வளையங்களும் 33. சுழுமுனை நாடி வழியாய்க் குண்டலினி சத்தி ஏறி மேலைத் துவாரத்தை (பிரமரந்திரம்) நணுகுவது போன்று, கொடிமரத்தில் கொடி ஏற்றுவது. வீணாத் தண்டின் உயரம் மூலாதாரத்தில் இருந்து

மேலைத் துவாரம் (பிரம ரந்திரம்) வரையிலே யாகும். அதுபோல கொடிமரமும் மூல இலிங்கத்தின் மட்டத்தில் இருந்து தூபியின் அளவேயாகும்.

தூபிக்கு ஏற்பட்டும் குறைந்தும் இருந்தால் அது பழுதாகும். கோயிலும், ஊரும், ஊரில் உள்ள குடிகளும் நல்ல நிலையில் இருக்கமுடியாது. தூபியும், கோபுரமும் ஒரே பொருளைக் குறிப்பன அல்ல, வெவ்வேறு பொருளைக் குறிப்பன. தத்துவம் அறியாதவர்கள் இரண்டு சொற்களையும் ஒரே பொருளில் தவறுதலாக வழங்குகிறார்கள். அவர்கள் எல்லாம் பொருள் தெரிந்தபின் அவ்வாறு வழங்கார்கள்.

8. தூல இலிங்கமும் சூக்கும இலிங்கமும்

கருவறையில் உள்ள மூல லிங்கம் சூக்கும லிங்கம் என்றும், கருவறைக்கு மேலே உள்ள தூபி தூல லிங்கம் என்றும் கூறுப. மூலத்தானம் அல்லது கருவறை என்பதுதான் உடம்பில் உள்ள மூலாதாரத்தைக் குறிக்கும். இதனை:

"பாய விமானமும் தூலம தாகுமால்
ஆய சதாசிவம் ஆகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர விலிங்கமாம்
ஆய் அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே"

—தமிழ் மூவாயிரம்-காலோத்தரம் - 1689

'எருவிடும் வாசற்கு இருவிரல் மேலே
கருவிடும் வாசற்கு இருவிரல் கீழே
உருவிடு சோதியை உள்க வல்லார்க்கு
கருவிடும் சோதி கலந்துநின் றானே"

தமிழ் மூவாயிரம் – வீராகமம் – 565

என்னும் திருமூலர் வாக்கால் அறியலாம்.

உடம்பினுள் இருக்கும் கருவறையாகிய மூலாதாரத்தைப் போலவே, கோயிலிலும் கருவறை என்கிற மூலத்தானம்உள்ளது. அதனைக் கற்பக்கிரகம் என்று கூறுவர் வடமொழியாளர். ஆங்கிலர் சாங்டம்-சாங்டோரம் (sanctum-sanctorum) என்பர்

குண்டலினி சத்தியைப் பற்றி எழுதிய சர் ஜான் உட்ரப் (Sir John Woodroffe) என்னும் ஆங்கில தத்துவ நிபுணரும், பம்பாயில் உள்ள டாக்டர் வசந்த ரிலே (Doctor Vasant G. Rele) என்பவரும் எழுதிய சர்ப்பெண்ட் பவர் (Serpent power) என்னும் தங்களுடைய புத்தகங்களில் உடம்பின்கண் மூலாதாரத்தில் முக்கோணத்தின் நடுவில் இலிங்க உருவம் உள்ளதைப் படம் பிடித்துக்காட்டி, அதற்கு விளக்கமும் எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறும் பகுதி அடியில் காட்டப்பட்டுள்ளது.

*"Kundalini" By Dr. V. G. Rele P. P. 44—55

Sacrum (Kanda) is called Mula-Kanda or Mula-

நம் நாட்டு யோகியர்கள் தங்களுடைய யோகக் கண்ணால் ஆறு ஆதார தரிசனம் செய்துள்ளார்கள். அப்படிப் பார்த்த யோகிகள்தாம் உலகம் உய்யும்பொருட்டுக் கோயில்களைக் கட்டச் செய்து அவைகளில் ஆதார மூர்த்திகளை அமைத்துள்ளார்கள். மூலாதார மூர்த்தியே கோயிலில் மூலஸ்தானத்தில் (கருவறையில்) இருப்பது. ஏனைய ஆதார மூர்த்திகள் கோபுர நிலையில் காட்டப் பட்டுள்ளார்கள்.

மூலாதாரத்துக்கு அதிதேவதை விநாயகர். மூலாதாரத்தில் முக்கோணத்தின் நடுவில் இலிங்க வடிவமாய் இருப்பது அவ் விநாயக மூர்த்தியே. விநாயகருக்கும் இலிங்கத்துக்கும் பேதம் இல்லை. இப்போதும் நாம் பெண்களைச் சாணியில் பிள்ளையார் பிடிக்கச்சொன்னால், இலிங்க உருவத்தையே அவர்கள் பிடித்து வைப்பது வழக்கமாயுள்ளது. இது தொன்றுதொட்ட பழக்கம்.

'சூக்கும இலிங்கம்' என்றால் அருவுருவ இலிங்கம். அது அருவமும் அல்ல உருவமும் அல்ல.

'தூல இலிங்கம்' என்றால் உருவத்தோடு விளங்குவது. சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களும் வெளிப்படையாகக் கட்புலனாவது.

Adhara ie. the root bulk or root Support of the Meru a Dandu (வீணைதண்டு) The Mula-Adhara is the receptacle of a plexus called Mula-AdharaChakrum In the Agama it is said that the Peri-Carp of the Adhara-Lotus is a *Trianyle* or *Kanda'* inside *the triangle there is a Linga* ie phallus clled SWayambu which is tapering like a neW unopend leaf-bud. The description of the phallus talies with the lower end of the spinal card with its durae Sheath. which ends in the Sacrum (Kanda) at the leval of the Second Vertebrae

The phallus extends a little over the triangle, and above is the *Kundalini* is said to be sleeping, closing the mouth of the Brama-Dwara which is on a level with the lower end of the Spinal-Canal called *Chitra.*

தூபி வேறு. கோபுரம் வேறு. தூபி என்பது கருவறையின் மேலே ஐந்து முகங்களோடும் ஒற்றைக் கலசத்துடனும் விளங்குவது. கோபுரம் என்பது சுற்று மதில்களின் நடுவில் விளங்குவது 3 — 5 — 7 — 9 நிலைகளைக்கொண்டது 3 — 5 — 7 — 9 நிலைகளுக்கு ஏற்ப, 3 — 5 — 7, 9கலசங்களைக் கொண்டது, கோபுரம் ஆறு ஆதார நிலைகளைக் குறிப்பது.

9. தூபி

சதாசிவ நாயனாரின் ஐந்து முகங்களையும் அததற்குரிய நிறங்களுடன் அமைத்துக் காட்டுவதுதான் தூபியாகும்.

"சத்திதான் நிற்கின்ற ஐம்முகம் சாற்றிடில்
உத்தரம் வாமம், உரைத்திடும் சத்தி
பச்சிமம், பூர்வம் தற்புருடன், உரை
தெற்கில் அகோரம், தென்கிழக்கு ஈசனே"

—தமிழ் மூவாயிரம்-காலோத்தரம் 1711

என்னும் திருமூலர் வாக்கின்படி தூபியின் தென்கிழக்கில் ஈசான முகத்தையும், கிழக்கில் தற்புருட முகத்தையும், தெற்கில் அகோர முகத்தையும், வடக்கில் வாமதேவ முகத்தையும், மேற்கில் சத்தியோசாத முகத்தையும் அமைக்கவேண்டும்.

"நடுவு கிழக்குத் தெற்கு உத்தரம் மேற்கு
நடுவு படிகம்நற் குங்கும வன்னம்
அடைவுள அஞ்சனம் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை ஐந்தே"

—தமிழ் மூவாயிரம் - காலோத்தரம் - 1705

என்றபடி ஈசான முகத்திற்குப் படிக நிறமும், தற்புருட முகத்திற்கு மஞ்சள் நிறமும், அகோர முகத்திற்குக் கருப்பு நிறமும் வாமதேவ முகத்திறகுச் சிவப்பு நிறமும், சத்தியோசாத முகத்திற்கு வெள்ளை நிறமும் கொடுக்கவேண்டும். இயற்கையாகவே

இவ் வைம்முகங்களும் ஐந்து நிறங்கள் உடையனவாய் இருப்பதால் சதாசிவப் பெருமானுக்கு "ஐந்நிற வண்ணர்" (பஞ்ச வர்ண ஈச்சுரர்) என்ற பெயரும் உண்டு.

பழைய கோயில்களில், அதாவது திருப்பணி நடக்கப் பெறாத பழைய கோயில்களில், தூபி அமைப்பு மேலே காட்டிய திருமூலர் வாக்கின்படி இருப்பதைக் காணலாம்.

தூபியின் ஒற்றைக் கலசத்தையே ஈசான முகமாகக் கொள்ளுவதும் உண்டு. அப்படிக் கொண்டால் தூபியின் தென் கிழக்குப் பக்கத்தில் ஈசான முகத்தை அமைக்க மாட்டார்கள். தற்காலம் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) கலசமாகிய அவ் வீசானமுகத்திற்கே நடைபெறுகின்றது. ஐந்து முகங்களில் ஈசானமே முக்கியமானது. ஈசானத்திற்கு அபிடேகம் செய்தால் மற்றைய முகங்களுக்கும் செய்தமாதிரி என்று கொள்ளுகிறார்கள்.

10. மகேச மூர்த்தங்கள்.

மகேச மூர்த்தங்கள் 25ம் அருள் வடிவங்களே. ஒவ்வொரு முகத்திற்கும் ஐந்து மூர்த்தங்கள்மேனிக்கு 25 மூர்த்தங்கள் உண்டு.

நான்கு திக்குகளிலும் அந்தந்த முகத்தைச் சேர்ந்த ஐந்து மூர்த்தங்களில் ஒன்றின் படிமத்தை அமைப்பது முறையாகும்.

ஈசானம்:—1. சோமாஸ்கந்தம் 2. கூத்தப் பெருமான்
3. இடபாரூடர் 4. சந்திரசேகரர்
5. கலியாணசுந்தரர்

தற்புருடம்:—1. பிச்சாடனர் 2. காமாரி 3. காலாரி
4. சலந்தராரி 5. முப்புராரி

அகோரம்:— 1 கயாரி 2. வீரபத்திரர் 3. தென்முகக் கடவுள்
4. கிராதர் 5. நீலகண்டர்

கிரகர்

வாமதேவம்:— 1. கங்காளர் 2 சக்ரதானர் 3. கயமுகானுக்
4 சண்டேசானுக்கிரகர் 5. ஏகபாதர்

சத்தியோசாதம்:-1 இலிங்கோற்பவர் 2. சுகாசீனர்
3. உமாமகேசர் 4. அரிஅர்த்தர்
5. அர்த்தனரி

தற்காலம் கோவிலைப் புதுக்கி வேலை செய்பவர்கள் இவைகளை யெல்லாம் கவனியாது, தவறுதலாக வெவ்வேறு நிறங்களைக் கொடுத்தும் உலகிற்குக் கேடு சூழ்கின்றார்கள். ஆகமவிரோதமான காரியங்களை இப்போது நடைபெறுகின்றன.

தூபியின் கிழக்கே இடபாரூடரையும், வடக்கே பிரமாவையும், மேற்கே திருமாலையும், தெற்கே தென்முகக் கடவுளையும் தற்காலம் தூபிகளில் அமைத்துள்ளார்கள், இதற்கு ஆதாரம் ஆகமத்தில் இல்லை,

பிரம மூர்த்தமும் திருமால் மூர்த்தமும் 25 மூர்த்தங்களில் சேர்ந்ததல்ல. ஆதலின், தூல இலிங்கமாகிய தூபியில் அப் படிமங்கள் இருக்க நியாயம் இல்லை

தூபி, ஒருநிலை, இருநிலை மூன்று நிலைகளாகவும் ஐந்து நிலைகளாகவும் அமைப்பதுண்டு. சில பழைய கோயில்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளைப் பார்க்கலாம்.

ஒருநிலையுள்ள தூபியில் ஈசானம் முதலிய பஞ்ச முகங்களும், இருநிலைகளும் அதற்கு மேற்பட்ட நிலைகளும் உள்ள தூபியில் ஈசானம் முதலிய ஐந்து முகங்களுக்குச்சேர்ந்த முகங்களை வரிசையாக அமைப்பது வழக்கம். இனிப் புதுப்பிக்கும் கோயில்களில் இந்த முறையைக் கைக்கொள்வார்களானால் உலகத்திற்கு நன்மை ஏற்படும்.

11. கோபுரம்

வாயிலும் ஐந்து நிலைகளையும் கொண்ட கோபுரம் எதனைக்

குறிக்கின்ற தென்றால், உடம்பின்கண் உள்ள ஆறு ஆதார நிலைகளைக் குறிக்கின்றது.

வாயிலாக உள்ளது மூலாதாரத்தையும் அதற்கு மேற்பட்ட நிலைகள் மேல் ஆதாரங்களையும் குறிக்கின்றன. ஒவ்வொரு ஆதார அதிதேவதைகளும் அந்தந்த ஆதாரத்திலுள்ள புவனங்களின் தெய்வங்களையும் அந்தந்த நிலைகளில் அமைக்கவேண்டும் சில பழைய கோயிற் கோபுரங்களில் இம்முறையைப் பார்க்கலாம்.

மூலாதாரம்

கோபுர வாயில் மூலாதாரத்தைக் குறிப்பதனால் அதன் ஆதார அதிதேவதை கணபதியை வலப் பக்கத்திலும், முருகரை இடப்பக்கத்திலும் அமைக்கவேண்டும்.

சுவாதிட்டானம்

வாயிலுக்கு மேலே அடுத்துள்ள நிலை சுவாதிட்டானத்தைக் குறிக்கும். அந்த நிலையில் வாயிலுக்கு இருபுறத்திலும் பிரமா - வாணி இவர்களின் படிமங்களை அமைக்கவேண்டும். பிருதிவி தத்துவ புவனங்களாகிய 108 புவன தேவர்களின் படிமங்களும் சுற்றியும் அமைக்கவேண்டும். இந்நிலைக்கு ஏற்பட்ட நிறம் மஞ்சள். இது நிவிர்த்தி கலையைக் குறிக்கும்.

மணிபூரகம்

அதற்கு அடுத்த மேலுள்ள நிலை மணிபூரகம் என்னும் ஆதாரத்தைக் குறிக்கும். இவ்வாதார அதிதேவதை மால்- திரு. இவர்களின் படிமங்களை வாயிலுக்கு இருபுறமும் அமைக்க வேண்டும். ஒவ்வொரு நிலைக்கும் வாயில்கள் உண்டு அப்பு தத்துவ புவனங்களாகிய 56 புவன தேவர்களையும் அத்தத்துவத்திற்கு உரிய நிறமாகிய நீலம் அல்லது பச்சை நிறத்தோடு அமைக்கவேண்டும். இந்நிலை பிரதிட்டா கலையைக் குறிக்கும்.

விசுத்தி

அதற்கு அடுத்து மேலுள்ள நிலை **விசுத்தி** என்னப்படும். இது வாயு தத்துவத்தை குறிக்கும். ஆதார அதிதேவதை மகேசன் - மகேசை. இவர்களின் படிமங்களையும் வாயு தத்துவ புவனங்களாகிய 18 புவன தேவர்களின் படிமங்களையும் வாயு தத்துவத்துக்குரிய நிறமாகிய **சாம்பல்** அல்லது **புகை** நிறத்தோடு அமைக்க வேண்டும். இந்நிலை சாந்தி கலையைக்குறிக்கும்.

ஆஞ்ஞை

அதற்கு அடுத்த மேலுள்ள நிலை **ஆஞ்ஞை** என்னப்படும். இது ஆகாய தத்துவத்தை குறிக்கும். ஆதார அதிதேவதை **சதாசிவன் - மனோன்மணி.** இவர்களின் படிமங்களையும், ஆகாய தத்துவ புவனங்களாகிய 15 புவன தேவர்களின் படிமங்களையும், ஆகாய தத்துவத்துக்குரிய நிறமாகிய **வெள்ளை** நிறத்தோடு அமைக்கவேண்டும். இந் நிலை சாந்தியாதீத கலையைக் குறிக்கும்.

மொத்தம் 224 புவனங்களும் அவைகளுக்குரிய புவன தேவர்களும் அவரவர்களுக்குரிய பத்தினிமார்களுடன் கோபுரத்தில் காட்சியளிப்பார்கள்.

கோபுரம் ஒன்று - மூன்று - ஐந்து - ஏழு - ஒன்பது நிலைகளாகக் கட்டப்படுவதும் உண்டு.

ஐந்து நிலைகள் உள்ள கோபுரம் ஆறு ஆதாரங்களைக்குறிக்கும் என்று மேலே காட்டப்பட்டது. அதற்கு மேற்பட்ட நிலைகள் **நிராதார** தத்துவங்களையும், **மீதானத்தையும்** குறிப்பனவாம்.

> ''ஆதாரத் தாலே **நிராதாரத்தே** சென்று
> **மீதானத்தே** செல்க உந்தீ பற
> விமலற் கிடமதென் றுந்தீபற'' —திருவுந்தியார்

என்ற திருவுந்தியார்ச் செய்யுளால் அறியலாம். ஏழு நிலைகளா யிருந்தால், நிராதாரத்துக்கு ஒன்றும் மீநானத்துக்கு ஒன்றும் ஆகக் கொள்க.

ஒன்பது நிலைகளாயிருந்தால் விந்து - நாதம் - சத்தி - சிவம் என்ற நான்கு தத்துவங்களைக் குறிப்பனவாகக் கொள்க.

ஒன்று - முதல் நான்கு நிலைகளாயிருந்தால், அவைகளி லேயே ஆறு ஆதாரங்களின் குறிப்புக்கள் கொண்டதாகக் கொள்க, அவ்வண்ணமே அந்நிலைகளை சிற்பிகள் அமைக்கவும் வேண்டும்.

12. மேலைக்கோபுர வாசல்

கிழக்கில் இருக்கும் கோபுரவாசல் மூலாதாரத்திலுள்ள பிரம துவாரத்தையும், மேலைக் கோபுரவாசல் ஆஞ்ஞையில் உள்ள பிரமரந்திரத்தையும் குறிக்கும். மேலைக் கோபுர வாசலைச் சொக்கவாசல் என்றும் கூறுவது உண்டு. இதனுடைய தத்து வத்தைத் திருமூலர்,

"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே"

—தமிழ் மூவாயிரம் - காமிகம் - 331

என்ற பாசுரத்தில் விளக்கியுள்ளார்.

மேலைத் துவாரமாகிய பிரமரந்திரம் திறந்தால் ஞானம் கைகூடும், சிவத்தையடையலாம் என்னும் கருத்தை விளக்கவே ஆண்டுக்கொருதரம் சொக்கவாசல் திறப்பது என்ற விழா கொண்டாடுகிறார்கள். இது பங்குனி உத்திரத்திலும், மார்கழித் திருவாதிரையிலும் இருமுறையும் கொண்டாடுவதும் உண்டு. திருப்பேரூரில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

ஆதார மூர்த்திகள் எல்லாம் அமையப்பெற்றதே கோயில் ஆகும்.

யாகசாலை உருத்திரர் தொழிலையும், அம்பலம் மகேசர் தொழிலையும், மண்டபங்கள் கலைகளையும் குறிப்பனவாம், கருவறை சதாசிவ தத்துவத்தையும். பிரமன் அல்லது வாணி கோவில் பிரம தத்துவத்தையும், விண்டு கோயில் விண்டுதத்துவத்தையும் குறிக்கும். இவைகள் எல்லாம் ஐந்தொழில்கள் (பஞ்ச கிருத்தியம்)என்றும் நித்தியம் என்பதைக்குறிக்கின்றன

13. நந்தி

"வள்ளற் பெருமானுக்கு வாய் கோபுரவாசல்" என்ற ஆகம வாக்கியத்தின்படி கோபுரவாசல் வாயானல். வாய்க்குள்ளிருக்கும் நாக்குக்கு உவமையாகக் கோயிலில் எதைக்கூறுவது?

கோபுர வாயிலுக்கு அடுத்தாப்போல் இருப்பது கொடிமரமும் நந்தியும். கொடிமரம்தான் வீணைத்தண்டு போன்றது என்று முன்னமே கூறினும் நந்தி நாக்குக்கு உவமையாகும். நாக்கினுடைய உதவியின்றி எப்பொருளும் உடம்பினுள் செல்லாதவாறுபோல, நந்தி யெம்பெருமானுடைய உத்திரவு பெற்றால் அன்றிக் கோயிலின் உள்ளே நுழைந்து வணங்கக்கூடாது என்று விதித்திருக்கிறார்கள்.

தேகத்தில் இருதயம் எப்போதும் அடித்துக்கொண்டு இருப்பதுபோல, அம்பலத்தில் உள்ள கூத்தப் பெருமான் எப்போதும் நட்டம் டிக்கொண்டிருப்பார். அம்பலம் ஐந்து அவையாவன: சிதம்பரம்-திருவாலங்காடு-மதுரை-குற்றாலம்

திருவொற்றியூர்.

14. இலிங்கத்தின்பேரில் நாகபடம் அணிதல்.

கோயில்களில் இலிங்கத்தின் பேரில் நாகபடம் சாத்துவ தானது, டாக்டர் ரிலே கூறுவதை ஒப்ப, குண்டலினிசத்தி பாம்புமண்டலித்த பிரகாரம் பிரம துவாரத்தில் தலைவைத்துப் படுத்திருப்பதை ஒக்கும். இக் குண்டலினிசத்தியைத்தான் தியான பலத்தால் எழுப்பி, வீணாதண்டின் அடிப்பாகத்தில் உள்ள பிரம துவாரத்தின் வழியாகச் செல்லும்படி செய்தால் மேலைப் பக்கத்தில் உள்ள பிரமரந்திரத்தில் புக்கு, அச் சத்தி யானது சீவனுக்குச் சிவதரிசனத்தைச் செய்விக்கும். இதனை அடியார்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்த ஆண்டுக்கொருதர மோ இருமுறையோ ஒவ்வொரு கோயிலிலும் விழாக் கொண் டாடப்படுகிறது.

இலிங்கத்துக்குச் சாத்தும் நாகபடம் இன்னும் எதனைக் குறிக்கின்றதென்றால், அனுசதாசிவர்கள் எல்லாம் ஆணவ மலம் ஒன்று மாத்திரம் உடைய விஞ்ஞானகலர் என்ற செய் தியையும் விளக்குகின்றது. இதனை,

"ஆணவமாதி மலம் ஐந்து அலரோனுக்கு
ஆணவமாதி நான்காம் மாற்கு, அரனுக்கு
ஆணவமாதி மூன்று, ஈசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் கானதே"

—தமிழ் மூவாயிரம் - சுப்பிரம - 2143

"ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயாகல ருக்கு

ஆணவ மாயையுங் கன்மமும் மூன்றுமே
காணும் சகலருக்குக் காட்டு மலங்களே''

—தமிழ் மூவாயிரம் - சுப்பிரம - 2202

அருண்மூர்த்தங்கள் எல்லாம் **சம்பு பக்கம்** என்றும் ஆன்ம கோடிகளில் பக்குவப்பட்டு மேல் நிலைகளையும் பதவிகளையும் அடைந்து, ஐந்தொழில் அதிகாரம் பெற்ற **அணு பக்கம்** என்றும் ஆகமங்கள் கூறுநிற்கும்.

மேலே கூறப்பட்ட மலங்கள் எல்லாம் அணுபக்கத்தார்க்கேயன்றி சம்புபக்கத்தார்க்கு இன்மை தெளிக.

15. ஆலயம் அவசியமா?

சரியை, கிரியை, யோக; ஞானங்களைப் படிமுறையாகக் கூறிய திருமூலரே,

மாடத்துளான் அலன் மண்டபத்துளான் அலன்
கூடத்துளான் அலன் கோயிலுள்ளான் அலன்
வேடத்துளான் அலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்
மூடத்துளே நின்று முத்தி தந்தானே''

—தமிழ் மூவாயிரம் - சுப்பிரம - 2568

என்று கூறியுள்ளாரே. சிவதீக்கை பெற்று, சிவபூசைசெய்து ஞானம் எய்திய பட்டினத்தடிகளே,

''கல்லிலும் செம்பிலுமோ இருப்பன் எங்கள்
கண்ணுதலே''

என்று கூறியுள்ளாரே. எப்போதும் சிந்தித்தும், பேசியும், வணங்கியும் வந்த தவத்தில் வல்ல சிவவாக்கியரும்,

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

என்றும் கூறியுள்ளாரே என்பீராயின் கூறுதும்: இன்னணம் கூறினவர்கள் எல்லாம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளை முறையாகக்கொண்டு ஒழுகினவர்களே. உருவ வழிபாட்டைஎன்றும் கொண்டவர்களே. அப்படி இருந்தும் அவர்கள் கூறியதிற்குப் பொருள் வேறு உள்ளது என்று கொள்ளவேண்டும்.

"கோயிலுள்ளான் அல்லன்"

என்று கூறிய திருமூலரே,

"தாபரத் துண்ணின்று அருளவல்லான் சிவன்
மாபரத் தண்மை வழிபடு வாரில்லை
மாபரத் தண்மை வழிபடு வாளர்க்குப்
பூவகத் துண்ணின்ற பொற்கொடி யாகுமே"

—தமிழ் மூவாயிரம் - காலோத்தரம் - 1688

என்று கூறுவது ஏன்? தாபர இலிங்கத்தை, அதாவது கோயிலில் இருக்கும் இலிங்கத்தை வணங்குவீர்களாக. சிவன் அவ்விலிங்கத்தின்றும் அருளவல்லான் என்று எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளார் பாருங்கள்.

சாக்கிய நாயனர் கல்லால் எறிந்து இலிங்கத்தை வழிபட்ட

சரித்திரத்தை ஞாபகம் செய்துகொள்வீர்கள் ஆனால் உண்மை விளங்கும்.

உலகின்கண் சிவன் இருவிதமான உருக்கொண்டே அருள் செய்யவல்லான்.

"தாபர சங்கமம் என்றிரண் டுருவினின் றும்

மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளிவைப்பன்"
என்றார் அருணந்தி சிவமும், இதனையே இன்னும் தெளிவாகத் திருமூலர்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"

என்று கூறியது காண்க.

அவர்கள் எல்லாம் அவ்வாறு கூறியது ஏற்றுக்கெனின் உண்மை வழிபாட்டு முறை தெரியாது உருவவழிபாடு செய்யும் மாந்தரைக் குறித்தே யாகும்.

"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் என்நினையு மவர்க்கும்
உள்ளெங்கு மிலனிங்கும் உளன் என் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணுத் பான்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவன் அன் பார்க்கே"

என்று அருணந்திசிவம் உருவ வழிபாட்டு முறையைத் தெளிவு படுத்தியுள்ளதைக் காண்மின்கள்.

இன்னும் இதனை ஒரு உதாரணமுகத்தால் விளக்கலாம். புத்தகம் ஒரு கோயில் போன்றது. அதற்கு நல்ல கட்டடம் கட்டி, அழகாகப் பீதாம்பரத்தில் வைத்து, பீடத்தின்பேரில் வைத்துக் காலையும் மாலையும் ஓதுதல் வேண்டும். ஓதுவதன் முன்னம் அறிவுக்கறிவாகி இருக்கும் சிவனை வழிபட்டு ஓதுதல் வேண்டும். ஓதினபின் ஓதினபடி நடக்கமுயற்சி செய்யவேண்டும் என்பது முறை.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

என்பது தமிழ் வேதம்.

இவ்வாறு ஓதி, ஓதியபடி ஒழுகினால் அறிவு வளரும். மாயை மறையும், மயக்கம் ஒழியும். அதனை விட்டு, அப்புத்தகக்கோயிலினுள் உள்ள பொருள்களை படித்து அறிந்துகொள்ளாமல், அப்புத்தக வழிபாட்டிலேயே ஈடுபட்டிருந்தால் அப்புத்தகமும் நைந்து போய், வழிபடுவோனும் அறிவு விளக்கம் பெறாதவன் ஆவான். அதுபோல், கோயில்வழிபாடும் உடற் தத்துவங்களை அறிந்துகொள்ளும் வழிபாடாக இருக்கவேண்டுமேயொழிய, கேவலம் உலகர் மெச்சும் உள்ளீடில்லா ஆடம்பர வழிபாடாக இருக்கக்கூடாது என்பதற்காகவே ஞானிகள் எல்லாம் அவ்வாறு கூறியுள்ளார்கள் ;என்று கொள்க. இக்கொள்கையை வற்புறுத்தவே,

"வாசியும் ஊசியும் பேசி வகையினால்
பேசி இருந்து பிதற்றிப் பயனில்லை

ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாமே"

—தமிழ் மூவாயிரம் - சுப்பிரம் - 2568

என்று திருமூலரும்,

'குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே"

என்று அப்பர்சுவாமிகளும் இரங்கிக் கூறியுள்ளதை நோக்குமின்கள். ஆதலின், அறிஞர்களும், ஞானிகளும், சித்தர்களும், சமய ஆசாரிய சுவாமிகளும் கூறும் உண்மைப்பொருள் உணர்ந்து,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே"

என்ற சிவஞான போத இறுதிச் சூத்திரத்தைக் கடைப்பிடித்து ஒழுகல் அறிவுடை மாந்தர் கடனும், அவர்கள் எல்லாம் இவ்வுண்மையைப் பிறருக்கும் எடுத்துக்கூறி அவர்களைத் தம்வழிப்படுத்த முயலலும் கடனும்.

16. முடிவு.

இதுகாறும் கூறியவாற்றான் கோயில்களானவை உடற் தத்துவங்களைத் தெள்ளத் தெளிய புறத்தே காட்டும் படம் எனவும் அதனால் அதற்குப் 'படமாடுங் கோயில்' என்று பெயர் அமைந்தது எனவும், படியாதவர்களும் நேரே பார்த்து அறிந்துகொள்ளும் முறையில் அக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், அப்

படமாலைக்கோயில்களை நல்ல நிலையில் வைத்து, அந்நன்னிலைமை ஏற்படக்கூடிய பூசைகள் முதலியன சரிவர நடக்கத் திட்டம் செய்து வாழ்வதே அறிவுடையார் செயல் என்றும். சரியாவான்கள், கிரியாவான்கள், யோகிகள், ஞானிகள் எல்லோருக்கும் அப் படமாலை கோயில் அவசியம் என்றும், தேகத்தில் குண்டலினி சத்தி மூலாதாரத்தில் அடங்கிக்கிடத்தல்போல, எங்கும் பரந்து கிடக்கும் அகண்டகார சிவபோக சத்தி சுயம்புத் தலங்களில் இயற்கையாகவே இலிங்கத்திடத்து அமைந்தும், பிரதிட்டைத் தலங்களில் பெரியோர்களால் இலிங்கத்திடத்து அச் சத்தி அடக்கப்பட்டும், சிவலிங்க வழிபாடு செய்பவர்கள் மனப் பக்குவத்துக்குத் தக்கபடி அச் சிவ சக்தியால் அருள் பெறவும் ஏற்பாடு செய்துள்ளார்கள் என்றும் அறிந்தாம்.

ஆதலின், ஆலயமானது தன்னையறிய வழிகாட்டியாய் உள்ளது இதனை,

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே"

என்ற திருமூலர் வாக்கைக் கடைப்பிடிக்க. இதைப் படிக்கும் அன்பர்கள் திருவருளுக்கு உரியவர்கள் ஆகுக.

உள்ளடக்கம்.

நெ		பக்கம்
1	படமாடுங் கோயில்	1
2	நடமாடுங் கோயில்	2
3	சீவன் சிவலிங்கம்	2
4	உடம்பு—ஆலயம்	4
5	பதி—பசு—பாச வேறின்மை	6
6	பலிபீடம்	6
7	உடம்புக்கும் கோயிலுக்கும் உள்ள ஒற்றுமை	8
8	தூல இலிங்கமும் சூக்கும இலிங்கமும்	9
9	தூபி	11
10	மகேச மூர்த்தங்கள்	12
11	கோபுரம்	13
12	மேலைக் கோபுர வாசல்	16
13	நந்தி	17
14	இலிங்கத்தின் பேரில் நாகபடம் அணிதல்	18
15	ஆலயம் அவசியமா ?	19
16	முடிவு	23

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	18	ஞாலவூல்	ஞாலநூல்
1	16	ஞாலவூல்	ஞாலநூல்
3	25	சிந்தாமகத்தில்	சிந்தாகமத்தில்
11	11	ஐம்முகம்	ஐம்முகம்
15	14	வெள்ளே	வெள்ளை

திருமந்திரமணி

துடிசை கிழார் அ. சிதம்பரனர் அவர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்

1.	உருத்திராக்க விளக்கம்	0—8—0
2.	ஆனைந்து	0—4—0
3.	சிவலிங்க உருவவிளக்கம்	0—8—0
4.	சிவபூசை விளக்கம்	0—8—0
5.	துடிசைப் புராணம்	1—0—0
6.	தமிழ்ச்சங்கங்களின் வரலாறு	2—8—0
7.	அகத்தியர் வரலாறு	1-12—0
8.	ஐந்திணை அகநூல்	1-12—0
9.	திருமூலர் திருமந்திர ஆலய விளக்கம்	0—4—0